ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

## எதிராசன் வாசகத்தோர் எழில் சரிதம் - 31. C

# ஸ்ரீ டெங்கணிக்கோட்டை ஸ்வாமி ஸ்ரீமத் வரதராமானுஜ மஹாதேசிகன்

---

இந்த ஸ்வாமி, தற்போதைய தர்மபுரி மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை (டெங்கணிக்கோட்டை) என்கிற ஸ்ரீக்ராமத்தில் ஒரு சித்திரை மாஸம் பூரட்டாதி நக்ஷத்ரத்தன்று திருவவதாரம் பண்ணினார். பிறப்பிலேயே பெரிய தனிகரான இந்த ஸ்வாமி, தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவராம். பின்னாளில் ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்தைத் தழுவியாயிற்றாம். இயல்பாகவே ஞான பக்தி வைராக்ய ஆசார அநுஷ்டானங்களில் உயர்ந்தவரான இந்த ஸ்வாமி, முநித்ரய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களில் மிக ப்ரஸித்தரான ஸ்ரீமத் கேதாண்டபட்டி ஸ்வாமியினுடைய திருவடிகளை ஆச்ரயித்தவராம். தமக்குப் பூர்வீகமான பல லக்ஷம் சொத்துக்களை விற்று கோவில் நிர்மாணங்கள், விக்ரஹ ப்ரதிஷ்டைகள் எனக் கைங்கர்யங்கள் பண்ணியாயிற்றாம்.

பரம வைராக்ய நிதியான இந்த ஸ்வாமி, தம் பதினெட்டாம் திருநக்ஷத்ரத்தில் திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளி, அங்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் கேதாண்டப்பட்டி ஸ்வாமியிடம் துரீயாச்ரம ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு யதிச்ரேஷ்டராக எழுந்தருளியிருந்தபடி. பதினெட்டு முதல் எண்பத்து ஒன்பது திருநக்ஷத்ரங்கள் வரை மாதூகரம் செய்து வாழ்ந்தாயிற்றாம். தம்

ஆசார்யவர்யரான ஸ்ரீமத் கேதாண்டப்பட்டி ஸ்வாமியிடம் அதீதமான பக்த்யதிசயத்தோடு கூடின ஈடுபாடு உடையவரான இந்த ஸ்வாமி திறத்தில், ஸ்ரீ கேதாண்டப்பட்டி ஸ்வாமிக்கும் பரிவு அதிகமாம். ஸ்ரீகேதாண்டப்பட்டி ஸ்வாமியின் சரம தசையில் அவ்விடத்தில் ஆச்ரயிக்க வந்த திரள்திரளான சிஷ்யர்களை பரந்யாஸம் பண்ணிக்கொள்ளும் பொருட்டு நம் டெங்கணிக்கோட்டை ஸ்வாமியிடமே அனுப்புவது வழக்கமாம்.

இந்த ஸ்வாமி, அவ்வப்போது மிக உயர்ந்த மிடற்றோசையுடன் கூடிய கம்பீரமான குரலில், “நாராயணா” “நாராயணா” என அலற்றியாகுமாம். சொல்லொணாத பக்தி மேலீட்டால் நிகழ்வது இது. இத்தால் பாமரர் பலரும் இந்த ஸ்வாமியை “நாராயணா ஸ்வாமி” என்றே அழைப்பராம். நித்யமும் நியதமாக த்ரிகால ஸ்நாநம் பண்ணியாகுமாம். இந்த ஸ்வாமி மாதூகரத்தில் வெறும் ப்ரஸாதம் (ஶுத்த அன்னம்) மட்டுமே ஏற்பராம். தொட்டுக்கொள்ள, பகவத் அர்ச்சனை பண்ணிய துளஸீ ப்ரஸாதமாம். ஸந்யாஸிகள் ஏற்கக்கூடிய அளவான எட்டு கவளமே ஸ்வீகரித்தாகுமாம்.

நித்யம் பகவத் ஆராதனம் முடித்தவுடன் ஸ்ரீதயாசதகம் அநுஸந்தித்தாகுமாம். ஒவ்வொரு ச்லோகம் ஆனதும் இரண்டு முறை ஸாஷ்டாங்க ப்ரணாமங்கள் பண்ணியாகுமாம். பெருமாள் ஸந்நிதியில் கோபிகா கீதம் பாடிக்கொண்டே தம்மையும் மறந்து ஆடியாகுமாம். அவ்வளவு பகவத்ப்ரேமம். த்ரவ்யத்திலோ, க்யாதி லாப பூஜைகளிலோ ஆசையற்றவராம். தம் திருவடிகளில் உபாயாநுஷ்டானம் பண்ணிக்கொள்ள வருவோரிடம் ஸந்த்யாவந்தனாதி அநுஷ்டானங்களை முறையாகப் பண்ணுகிறார்களா எனக் கேட்டாகுமாம். சிலர் தெரியாது என்றால், உடனே அவர்களுக்குப் பூர்ணமாகச் சொல்லி சிக்ஷித்தாகுமாம். சிலகாலம் ஸ்ரீரங்கத்தில் வடதிருக்காவிரிக்கரையில் வாஸம் பண்ணியருளிற்றாம். அப்பொழுது பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுடன் நெருங்கிய ஸமாகமம் ஏற்பட்டதாம். ஸ்ரீரங்கவாஸத்தின்போது, பல சிஷ்யர்களின் ப்ரார்த்தனைக்கு இணங்க, பெரிய பெருமாள் திருவடிகளிலேயே பரந்யாஸம் பண்ணிவைத்தாயிற்றாம்.

பின்னாளில் பெருமாள்கோவில் வாஸத்தை உகந்து அங்கு எழுந்தருளியாயிற்றாம். அப்பொழுது தேவப்பெருமாள் திருத்தேர் உத்ஸவத்தின் போது, பெருமாள் திருத்தேர் நிலைக்கு வந்துசேரும் வரை நிர்ஜல உபவாஸம் இருந்தாகுமாம்.

ஒரு ஸமயம் ஒரு நீதிபதி, ஸ்வாமியை ஆச்ரயித்து ப்ரபத்தி பண்ணிக் கொண்டாராம். ஆசார்ய ஸம்பாவணையாகப் பத்தாயிரம் ரூபாய்கள் ஸமர்ப்பித்தாராம். ஸ்வாமி அதைத் தொடாமலே மதுராந்தகம் பெருமாளுக்குத் திருவாபரணம் பண்ணுவதற்காக அனுப்பிவிட்டாராம்.

தம் வாழ்நாள் முழுவதும் விரக்தாக்ரேஸரராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமியை உத்ஸாஹப்படுத்தி, அந்த மஹான் துரீயாச்ரமம் ஸ்வீகரிக்கக் காரணமாய் இருந்தவராம் இந்த ஸ்வாமி.

வற்றியதான தூய செம்பொன்னைப் போன்ற திருமேனியில் பளபளவெனப் பன்னிரு திருமண்காப்புகள் பளிச்சிட, தாமரை மணி மாலை துளசி மணிமாலைகளுடன் ஸேவை ஸாதிப்பராம். ஒருநாளும் சரீர அஸக்தி எனப் படுத்ததில்லையாம்.

ஸ்ரீ பரகால மடத்து யதீச்வரரான ஸ்ரீமத் அபிநவ ரங்கநாத ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி (பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவனின் காலக்ஷேப ஆசார்யர்) இந்த ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்து பரந்யாஸம் பண்ணிக்கொண்டாராம். பின்னாளில் இந்த ஸ்வாமி விஷயமாக அஷ்டோத்தர சத நாமாவளி ஸமர்ப்பித்தாராம்.

ஸ்ரீ அஹோபில மடத்தில் முப்பத்து ஏழாம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த பிள்ளைப்பாக்கம் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், இந்த ஸ்வாமியிடமே துரீயாச்ரம ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டாராம்.

ப்ரஸித்த வித்வான்களான ஸ்ரீ உ.வே. ஈகை சங்கபுரம் ராமாநுஜ தாதாசார்ய ஸ்வாமி இந்த ஸ்வாமி விஷயமாக “மங்கள மாலிகா” என்ற திருநாமத்தில் இருபது ச்லோகங்களை ஸமர்ப்பித்தாராம். இந்த ஸ்வாமியின் திருவடியான ஸ்ரீ உ.வே. சேட்டலூர் பையம்பாடி ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமியும் இந்த ஸ்வாமி விஷயமாக எழுபத்திரண்டு ச்லோகங்களைக் கொண்ட ஹம்ஸேந்த்ர ஸப்ததியையும், இருபது ச்லோகங்களைக் கொண்ட ஹம்ஸேந்த்ர மங்களமாலிகாவையும் ஸமர்ப்பித்தாராம்.

இந்த ஸ்வாமி தம் எண்பத்து ஒன்பதாம் திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீரங்கத்தில் திருநாடலங்கரித்தாயிற்றாம். இந்த ஸ்வாமியினுடைய ப்ருந்தாவனம், வடதிருக்காவிரிக்கரையில் அமைந்துள்ளது.

## ஸ்ரீமத் ஸ்வாமி தனியன்

ஸ்ரீரங்கலக்ஷ்மண முநீந்த்ர பதாரவிந்த
ஸேவோபலப்த நிகமாந்த யுகாந்தரங்கம் ।
வைராக்ய பாக்ய நிரவத்ய குணப்ரகர்ஷம்
வந்தே ஸதா வரதலக்ஷ்மண யோகிவர்யம் ॥

ஸ்ரீமதே வரதராமானுஜ மஹாதேசிகாய நம:



ஸ்ரீ டெங்கனிக்கோட்டை ஸ்வாமி